**செய்தி வெளியீடு எண்.398** **நாள்.25.07.13**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வருவாய்த்துறை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், பொதுமக்களை வெகுவாக கவர்ந்துள்ள மக்களைத் தேடி வருவாய்த் துறை "அம்மா" திட்ட செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை எய்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், இதர அறிவிப்புகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.'தோப்பு' என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் தலைமையில் இன்று (25.7.2013) தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை செயலர் திரு. ககன்தீப்சிங்பேடி, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் டி.எஸ் ஸ்ரீதர், இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டத்துறையின் முதன்மை செயலர் / ஆணையர் திரு.ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நில நிர்வாக ஆணையர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நில சீர்திருத்தத்துறையின் முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை கூடுதல் ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., நிலசீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ.சந்திரகுமார், இ.ஆ.ப., இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர் மு.ஜெயராமன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில்,

தமிழக அரசு ஏழை எளியோர் ஏற்றம் பெற்றிடும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செம்மையோடு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு பொது மக்களிடம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ள மக்களைத் தேடி வருவாய்த் துறை "அம்மா" திட்டம், புதிய விரைவு பட்டா மாறுதல் திட்டம், பள்ளி மாணவ மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வகையான சான்றிதழ்களையும் தாம் பயிலும் பள்ளிலேயே பெற்றுக் கொள்ளுதல், ஏழை மக்களுக்கு விலையில்லா மிக்சி கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிடும் திட்டம், புதிய உழவர் பாதுகாப்புத்திட்டம் வங்கிகள் மூலம் முதியோர் ஓய்வுதியம் வழங்கிடும் திட்டம் போன்ற சமுக பாதுகாப்புத்திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் அமைந்துள்ளன.

மக்களைத் தேடி வருவாய்த் துறை "அம்மா" திட்டம் மூலம் கடந்த 4 மாதங்களில் 22.58 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு 13.84 இலட்சம் (61 சதவீதம்) மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. உழவர் பாதுகாப்பு திட்டம் மூலம் 10.18 இலட்சம் பயனாளிகளுக்கு 340.82 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 57.38 இலட்சம் மகளிருக்கு விலையில்லா பேன், மிக்சி, கிரைண்டர் வழங்கப்பட்டுள்ளது. 3.63 கோடி நபர்களுக்கு பயோ மெட்ரிக் முறை மூலம் அடையாளம் பதிவு செய்யும் பணி நடைபெற்றுள்ளது.

அரசின் பிற துறைகளுக்கெல்லாம் முன்னோடியாய் முதுகெலும்பாய் விளங்கிடும் இந்த வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் உரிய நேரத்தில் உரிய மக்களைச் சென்றடைய செய்திடும் வகையில் நாம் அனைவரும் அர்பணிப்போடு பணியாற்றிட வேண்டுமாறு உங்களை அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.